# தேசிய டிஜிரல் ( எண்மய) நூலகம்

## எண்மய நூலகத்தின் கொள்கை

**2017**

**டிஜிட்டல் நூலகப் பிரிவு**

**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**

**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**

**எண்மய நூலகக் கொள்கை**

## 01. அறிமுகம்

1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையானது தாபிக்கப்பட்டதுடன் இப்பொழுது அது 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைய செயலாற்றி வருகிறது. இந்நிறுவனமானது கல்வி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருவதுடன் இதன் பிரதான பொறுப்பு இலங்கைத் தேசிய நூலகத்தை வழிநடத்திச் செல்வதும் தேசிய மட்டத்தில் நூலக தகவல் சேவைகளை அபிவிருத்தி செய்தலுமாகும். தேசிய நூலகத்தில் தற்போதிருக்கும் வளங்கள் பெருமளவில் அச்சிட்ட சாதனங்களாகவே உள்ளன. தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தியுடன் தேசிய நூலகத்தில் எண்மய (டிஜிட்டல்) வளங்களை அபிவிருத்தி செய்தல் மிக முக்கியமான தொன்றாக உள்ளது.

அதனால் தேசிய டிஜிட்டல் நூலகத்தை ஆரம்பித்து அதை நடைமுறைப்படுத்திச் செல்வது தேசிய முக்கித்துவம் வாய்ந்ததொன்றாகும். இலங்கைத் தேசிய நூலகத்துடன் இணைந்து தேசிய டிஜிட்டல் நூலகத்தின் ஆரம்ப வேலைகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது நூலகச் செயற்பாடுகளின் பொருட்டு தகவல் தொழில் நுட்பம் பரந்த அளவில் உபயோகப் படுத்தப்படுவதுடன் டிஜிட்டல் தகவல்களை அடைவதற்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கான அடிப்படைப் பொறுப்பு தேசிய டிஜிட்டல் நூலகத்தைச் சார்ந்ததாகும். இருபத்திநாலு மணித்தியால நேரமும் மக்களுக்கு தொடரறா (online)சேவை மூலம் தகவல்களுக்குப் பிரவேசிப்பதற்கு இதன் மூலம் சாத்தியமாகும்.

## 02. தேசிய எண்மய (Digital) நூலகம்

நவீன தகவல் துறையில் எண்மயப்படுத்தல் (Digitization) புதிய தன்மையாகும். நூலகங்களைப் போல ஏனைய நிறுவனங்களும் தமது வளங்களை பாதுகாத்தல் மற்றும் பரந்தளவு பாவனையை கருத்தில் கொண்டு எண்மயப்படுத்தலில் ஈடுபட்டு வருகின்றனர். தேசிய டிஜிட்டல் நூலகமானது பல செயற்பாடுகளைச் செய்து வருவதுடன் அதன் கீழ் வாசகர்களின் பொருட்டு டிஜிட்டல் தகவல்களை வழங்குதல், டிஜிட்டல் சேகரிப்பின் அபிவிருத்தி மற்றும் தேசிய நூலகத்தின் வளங்களை எண்மயப்படுத்துதல் என்ன நடைபெற்று வருகின்றன.

## 03. தேசிய டிஜிட்டல் நூலகத்தின் நோக்கமும் தூரநோக்கும்.

**தூரநோக்கு:**
சகல மக்களுக்கும் டிஜிட்டல் தகவல் சேவைக்கான பிரவேசத்தை வழங்கும் தேசிய அறிவின் மத்திய நிலையமாக (கேந்திரமாக) இருத்தல்.

**நோக்கம்:**
அறிவுபூர்வமான சமுதாயத்தை உருவாக்குவதற்காக நாட்டில் புலமைச் சொத்து உரிமையை எண்மய ரூபத்தில் பாதுகாத்தலும், டிஜிட்டல் தகவல் சேவைக்கான பிரவேசத்தை வழங்குவதன் மூலம் மக்களின் தகவல் தேவையைப் பூர்த்திசெய்தல்.

## 04. தேசிய டிஜிட்டல் நூலகத்தின் குறிக்கோள்

4.i. இலங்கையில் அல்லது இலங்கை தொடர்பாக அல்லது இலங்கையரினால் வெளியிடப்பட்ட டிஜிட்டல் நூலக வளங்களை ஒருங்கு திரட்டுதல், பாதுகாத்தல் மற்றும் நடைமுறைப்படுத்திச் செல்தல்.

4.ii. தேசிய டிஜிட்டல் நூலகத்திற்குப் பொருத்தமானது எனக் கருதப்படும் வேறு டிஜிட்டல் நூலக வளங்களையும் பெற்றுக் கொள்ளுதல்.

4.iii. சகல மக்களினதும் பாவனையின் பொருட்டு அவர்களின் தேவைக்குப் பொருத்தமான டிஜிட்டல் நூலக வளங்கள் தொடர்பான சேகரிப்பொன்றை கட்டியெழுப்புவதும் அதைக் கொண்டு நடத்துவதும்.

4.iv. தேசிய டிஜிட்டல் தகவல் சேவையின் பொருட்டு ஏனைய டிஜிட்டல் வளங்களுடன் கூடிய நூலகங்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் ஒன்றிணைந்த தகவல் சேவையை நடைமுறைப்படுத்ததல்.

4.v. இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் தகவல் ஈடுபடுத்தும் (உசாவு) சேவையையும், அச்சிட்ட பிரதிகள் மற்றும் டிஜிட்டல் சேவைகளையும் வழங்குதல்.

4.vi. வாசகர்களின் தகவல் சேவையை நிறைவுசெய்யும் நோக்கத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தை உபயோகித்து டிஜிட்டல் நூலக வளங்களுக்கு பிரவேசிப்பதற்கு வசதி செய்து கொடுத்தல்

4.vii. தேசிய நூலகத்தின் வளங்கனைப் பாதுகாப்பதற்கானதொரு வழியாக எண்மயப்படுத்தல் முறையைக் கையாள்தல்.

4.viii. நூலகங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் டிஜிட்டல் வளங்களைப் பாரிமாறிக் கொள்தல் (Resource Sharing)

## 05. டிஜிட்டல் நூலக வளங்களை இனங்காணுதலும், சேகரிப்பை அபிவிருத்தி செய்தலும்.

டிஜிட்டல் நூலகச் சேகரிப்பின் படிப்படியான அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளதுடன் அதன்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும்

### 5.i. டிஜிட்டல் நூலக வளங்ளை (ஈட்டுதல்) ப் பெற்றுக் கொள்ளுதல்

பல்வேறு மூல வளங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் டிஜிட்டல் வளங்களை டிஜிட்டல் நூலகம் கொண்டிருக்கும். அதன் கீழ், கீழ்க் காணப்படும் மூல வளங்களின் ஊடாகப் பெறப்படும் டிஜிட்டல் வளங்களை தேசிய டிஜிட்டல் நூலகம் கொண்டிருக்கும்.

**தேசிய நூலகத்தின் எண்மயப்படுத்தும் (Digitalization) செயற்திட்டத்தின்கீழ் எண்மயப் படுத்தப்பட்ட தேசிய நூலகத்தின் வளங்கள்**

தேசிய நூலகத்தின் எண்மயப்படுத்தும் (Digitalization) செயற்திட்டத்தின்கீழ் எண்மயப் படுத்தப்படும் வளங்கள் டிஜிட்டல் நூலகத்தில் சேர்த்துக் கொள்ளப்படும். தேசிய நூலகத்தின் வளங்களை எண்மயப்படுத்துவதின் பிரதான நோக்கம் அவ்வளங்களைப் பாதுகாப்பதும், பரந்த அளவிலான வாசகர்களுக்கு அவற்றை அணுகுவதற்கான வசதியை வழங்குவதாகும். தேசிய நூலகத்தின் வளங்களை எண்மயப்படுத்தும்போது

எண்மயப்படுத்தப்பட வேண்டிய வளங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

அழிவடைவதற்கான சவால்களை எதிர்நோக்கும் வளங்களுக்கு விசேடமாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அதன்போது எண்மயப்படுத்தப்பட வேண்டிய வளங்களின் முன்னுரிமை அடிப்படையிலான பட்டியலைத் தயாரித்தல் அவசியமாகும். எண் மயப்படுத்துவதற்காக வளங்களைத் தெரிவு செய்யும்போது தேசிய நூலகத்தின் நோக்கம், பேணல் முக்கியத்துவம் அதேபோல தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் என்பன கவனத்தில் கொள்ளப்படும்.

**தேசிய டிஜிட்டல் நூலகத்திற்காக டிஜிட்டல் வளங்களைப் பெற்றுக்கொள்ளுதல்**

இலங்கைத் தேசிய நூலகத்தின் பொருட்டு நூலக வளங்களைப் (Library Resources) பெற்றுக் கொள்ளும்போது பின்பற்றப்படும் பொதுவான வழிமுறைகள் இங்கும் பின்பற்றப்படும்.

- சட்ட வைப்புப் பிரதி
- கொள்வனவு செய்தல்
- நூற் பரிமாற்றம்
- அன்பளிப்புப் போன்ற வழிகளின் கீழ் டிஜிட்டல் நூலகத்திற்கான வளங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

**5.ii. டிஜிட்டல் நூலகத்தின் வளங்கள்**

1. இலத்திரனியல் நூல்கள்- e-books
2. இலத்திரனியல் ஜேணல்கள் - e-journals
3. இலத்திரனியல் புதினத்தாள்- e-newspapers
4. புகைப்படங்கள்- Images
5. இலத்திரனியல் செவிப்புலக் கோவைகள்- Audio files
6. இலத்திரனியல் கட்புலக் கோவைகள் - Vidio files
7. இலத்திரனியல் கையெழுத்துப்பிரதிகள்- Digital Manuscript
8. இணைய வளங்கள் - Web Resources
9. தரவுத் தளங்கள் - Data bases

**5.iii. டிஜிட்டல் வளங்களைப் பகுப்பாக்கம் செய்தல்**

டிஜிட்டல் வளச் சேகரிப்பில் உள்ள வளங்களுக்குப் பொருத்தமான பகுப்பாக்கத் திட்டத்தின் கீழ் பகுப்பாக்கம் செய்யப்படும். தேசிய சேகரிப்பின் சுபாவம் மற்றும் அணுகுமுறை என்பன கவனத்தில் கொள்ளப்படும்.

**06. டிஜிட்டல் தவல்களைக் களஞ்சியப்படுத்துதலும் பாதுகாத்தலும்**

டிஜிட்டல் தவல்களைக் களஞ்சியப்படுத்துதலானது உரியமுறையில் விஞ்ஞான ரீதியில் நடைமுறைப்படுத்த லேண்டியதுடன் டிஜிட்டல் வளங்கள் பொருத்தமான சூழலில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும். டிஜிட்டல் வளங்களின் பொருட்டு தேவையான சூழல் மட்டத்தை கையாள்தல் வேண்டும். இதற்கும் மேலால் டிஜிட்டல் வளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் நோக்கத்துடன் அவற்றின் மேலதிகப் பிரதிகள் (Backups) பொருத்தமான வேறு ஒரு இடத்தில் வைப்பிலிடுதல் பொருத்தமாக இருக்கும். இதற்கும் மேலால் வைரஸ் போன்ற ஏனைய உபத்திரவங்களில் இருந்து டிஜிட்டல் வளங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தேவையான பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**07. டிஜிட்டல் சாதனங்களைப் பேணல்**

நூலக சாதனங்களின் பேணலின் நோக்கம் அவற்றின் தன்மை மாறாமல் நீண்டகாலத்திற்குப் பாதுகாப்பதேயாகும். டிஜிட்டல் வளங்களின் பேணலின் பொருட்டு விஞ்ஞான ரீதியிலான வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும். டிஜிட்டல் வளங்களின் பேணலின் பொருட்டு பேணல் விற்பன்னர்களின் ஆலோசனைகள் மற்றும் உதவி பெறப்பட வேண்டும். பேணற் செயற்பாடுகளின் பொருட்டு நவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்றவேண்டும். டிஜிட்டல் வளங்களில் ஏற்படும் ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பேணல் நிலமை மற்றும் ஆபத்துக்களின் நிலை தொடர்பாக அடிக்கடி அபாயக் கணிப்பீடு (Risk Assesment) செய்யப்பட வேண்டும்

**08. டிஜிட்டல் வளங்களிற்கான வாசகர் பிரவேசம்**

டிஜிட்டல் வளங்களைக் கையாள்வற்கான வசதிகளை வாசகர்களுக்குப் பெற்றுத்தர வேண்டும். அங்கு தொடரறா சேவை (online) வசதிகளைக் கொண்ட இணையப் பக்கங்களை அணுகுவதற்கான வசதிகளை வழங்குவதுடன், ஏனைய வளங்களுக்கு தேசிய நூலகத்தினுள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பிரவேச வசதிகளை வழங்கமுடியும். வெளியீட்டு உரிமைச் சட்டத்தின் கீழ் தொடரறா வசதியை வழங்க முடியாத டிஜிட்டல் வளங்களின் நூற்பட்டியல் விபரங்களை மட்டும் தொடரறா முறையில் வழங்க முடியும். டிஜிட்டல் வளங்களின் பிரதிகளை வாசகர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு பெற்றுத்தர முடியும். அத்துடன் பிரதிகளை வழங்கும்போது வெளியீட்டு உரிமை தொடர்பான சட்டதிட்டங்களுக்கு அமையச் செயற்பட வேண்டும்.

**09. வெளியீட்டு உரிமைச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய சட்டங்கள்**

தேசிய நூலகத்தின் வளங்களை எண்மயப்படுத்தும் போதும், டிஜிட்டல் வளங்களைத் தொடரறா இணைய வசதியைத் திட்டமிடும்போதும், வெளியீட்டு உரிமை தொடர்பான சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. டிஜிட்டல் நூலக நியமம்**

தேசிய நூலகத்தின் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்திச் செல்வதற்குத் தேவையான எண்மயப்படுத்தல் நியமங்களைத் தயாரித்து அவை பின்பற்றப்பட வேண்டும். இந்த நியமங்களைத் தாரிக்கும்போது நூலகத் துறைசார்ந்த சர்வதேச நிறுவனங்கள் தயாரித்துள்ள டிஜிட்டல் நூலக நியமங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**11. வெளிக்கள நிறுவனங்களுடன் கூட்டுறவு மற்றும் வளங்களைப் பரிமாறிக்கொள்தல்**

விசேடமாக வளங்களை டிஜிட்டல் மயப்படுத்தும் போது தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் கூட்டுறவை ஏற்படுத்துதல் அவசியமாகும். ஏனைய நிறுவனங்களின் டிஜிட்டலாக்கச் செயற் திட்டம் தொடர்பாக தெளிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன்

அதன் மூலம் தேவையற்ற இரட்டிப்பு வேலையைத் தவிர்க்கவேண்டும். அதேபோல ஏனைய நிறுவனங்களுடன் டிஜிட்டல் வளங்களை பரிமாறிக்கொள்ள முடியும் (Resource Sharing).

**12. நிதி ஒதுக்கீடு**

தேசிய டிஜிட்டல் நூலகத்தின் சகல செயற்பாடுகளின் பொருட்டும் போதியளவு வருடாந்த நிதி ஒதுக்கீடு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் ஒதுக்கப்படும். இதற்கும் மேலால் இச் செயற்பாடுகளின்போது வெளிக்கள நிலையங்களில் இருந்து நிதி உதவியும் வேறு உதவிகளையும் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**13. அடிப்படை வசதிகள்**

டிஜிட்டல் நூலகத்தின் அபிவிருத்திக்குத் தேவையான அடிப்படை சதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் கீழ் டிஜிட்டல் நூலகத்துடன் தொடர்புடைய சகல செயற்பாடுகளின் பொருட்டும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யவேண்டும்.

**14. டிஜிட்டல் நூலக ஆலோசனைக் குழு**

தேசிய டிஜிட்டல் நூலகத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு டிஜிட்டல் நூலகத்தின் ஆலோசனைக் குழு ஒன்றை நடைமுறைப்படுத்திச் செல்தல் வேண்டும். டிஜிட்டல் நூலகச் செயற்பாடுகள் வெளியீட்டு உரிமை மற்றும் டிஜிட்டல் பேணல் தொழில்நுட்பம் உட்பட ஏனைய பிரிவுகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அந்தந்தத் துறைசார் விற்பன்னர்கள் இக் குழுவில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**15. சாத்தியத்தை அபிவிருத்தி செய்தல்**

தேசிய டிஜிட்டல் நூலகத்தின் செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழியர்களின் இயலுமையை (சாத்தியத்தைக்) கட்டியெழுப்புவதற்கு தேவையான பயிற்சி வழங்கப்பட வேண்டும். டிஜிட்டல் துறையில் புதிய போக்குத் தொடர்பாக நவீன தகவல்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மனிதவள நிருவாகம், முகாமைத்துவம், எண்மயப்படுத்தல், தகவல் தொழில் நுட்பம், பேணல் மற்றும் நூலக ஆவணவாக்கல் விஞ்ஞானம் சார் துறைகள் தொட்பாக பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

**16. அறிவூட்டலில் அபிவிருத்தி**

தேசிய டிஜிட்டல் நூலகத்தில் உள்ள வளங்களின் பாவனை மற்றும் அங்கு வழங்கப்படும் சேவைகளின் அபிவிருத்தி தொடர்பாக பொது மக்களிடத்தில் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன்பொருட்டு துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், கையேடுகள், இணையப்பக்கங்கள் போன்ற வளங்களை உபயோகப்படுத்த முடியும். இதன் மூலம் தேசிய நூலகத்தின் டிஜிட்டல் வளப் பாவனையை அதிகரிப்பதற்காக நடலடிக்கை எடுக்க முடியும்.

**17. டிஜிட்டல் நூலகத்தின் முகாமைத்துவம்**

தேசிய டிஜிட்டல் நூலகத்தின் செயற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் டிஜிட்டல் நூலக ஒன்றியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். இந்தப்பிரிவின் செயற்பாடுகளுக்கு ஏனைய பிரிவுகளின் உதவி பெறப்பட வேண்டியுள்ளதுடன் அப்பிரிவுகள் உதவி வழங்க வேண்டும். டிஜிட்டல் நூலகத்தின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தைச் நிறுவனத்தின் கண்காணிபின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

## 18. கொள்கையை புதுப்பித்தமைத்தல்

தேசிய டிஜிட்டல் நூலகத்தின் கொள்கை காலத்திற்கேற்ப மறுசீரமைக்கப்பட வேண்டியதுடன் அதிகுறைந்தது மூன்று வருடங்களுக்கு ஒரு தடைவ மறுசீரமைத்தல் உகந்ததாகும்.